# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2015 மே திங்கள் 29–ம் நாள் (29.05.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

துணை இயக்குநர், முன்னாள் படைவீரர் நலன், நாகர்கோவில் அவர்களின் கடிதம் ந.க.எண்.2006/2006/அ2 நாள் 20.04.2015–ல், இந்நகராட்சிக்கு படைவீரர் கொடிநாள் 2003–ன் கீழ் வழங்கப்பட்ட ரூ.10,000/–க்கான ரெசீது புத்தகங்களில் ரூ.4,000/–ம் செலுத்தப்படாமல் நிலுவையில் உள்ளதால், தணிக்கையில் தடை எழுப்பப்பட்டுள்ளதாகவும், மேற்படி தணிக்கை தடையினை நீக்கும் ரூ.4,000/–க்கான ரெசீது புத்தகம் அல்லது வசூல் தொகையினை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி ரெசீது புத்தகங்கள் எதுவும் கிடைக்கப் பெறாததால், படைவீரர் கொடி நாள் 2003 நிலுவைத் தொகை ரூ.4,000/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1922/2010)

**தீர்மான எண் : 1199 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை பகுதியில் 23–வது வார்டில் FII/67 எண் கொண்ட மின்கம்பத்தை மாற்றியமைக்க மதிப்பீட்டு கட்டணம் ரூ.27,500/– செலுத்த உதவி மின்பொறியாளர் கடிதம் ந.க.எண். உ.பொ/விநி/குள/கோ.கட்டு/அ246/15 நாள் 27.04.2015–ன்படி கேட்டுள்ளார். மேற்படி தொகை செலுத்துவது குறித்து மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/4378/2010)

**தீர்மான எண் : 1200 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் வினியோக பணிகளுக்காக தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமனம் செய்வதற்கான உத்தேச செலவு மூன்று மாதங்களுக்கு ரூ.1,20,000/– இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1038, நாள் 27.11.2014–ல் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதன்படி பணியாளர்களை பணியமர்த்தப்பட்டு 30.04.2015–வுடன் முடிவடைந்துள்ளது. பணியின் அவசர அவசியம் கருதி 4 பணியாளர்களை மேலும் 89 நாட்களுக்கு பணியமர்த்த உத்தேச செலவு தொகை ரூ.1,20,000/–க்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.
**அ.குறிப்பு** : பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்றதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ2/2691/2014)

**தீர்மான எண் : 1201 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் கதவு எண்.11/72 தற்போது கட்டிட உரிமையாளர் வசிக்காத காரணத்தால் தற்காலிகமாக குடிநீர் குழாய் இணைப்பு எண்.1344–ஐ துண்டிப்பு செய்யுமாறு மனுதாரர் திரு.வஸ்தியான் ராஜையன் என்பவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண வரி நிலுவை இல்லை. எனவே மேற்படி கட்டிடத்தின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்வது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/849/2015)

**தீர்மான எண் : 1202 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பகுதியில் புதிய தெருவிளக்கு அமைக்க மதிப்பீட்டு கட்டணமாக தொகை ரூ.1,681/– செலுத்த உதவி மின்பொறியாளர் கடிதம் உ.பொ/விநி/குள/கட்டு/அ.243/15 நாள் 20.04.2015–ன்படி தெரிவித்துள்ளார். எனவே மேற்படி தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.இ2/4378/2010)

**தீர்மான எண் : 1203 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில், 12–வது வார்டில் FII-95 மின்கம்பத்தை மாற்றியமைக்க மதிப்பீட்டு கட்டணமாக தொகை ரூ.14,400/– செலுத்த உதவி மின்பொறியாளர் கடிதம் உ.பொ/விநி/ குள/கட்டு/அ.242/15 நாள் 20.04.2015–ன்படி தெரிவித்துள்ளார். எனவே மேற்படி தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/4378/2015)

**தீர்மான எண் : 1204 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை அங்கன்வாடி மின்இணைப்பு எண்.172–013–663–11/2010–ல் மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளது. துண்டிப்பு செய்யப்பட்ட மின் இணைப்பில் மின்சாரம் பயன்படுத்தியதாகவும், 1043 யூனிட்டுக்கு ரூ.6,902/– செலுத்த கேட்டு உதவி மின்பொறியாளர் தனது கடிதம் ந.க.எண்.உ.பொ/விநி.IIகுள/அ.எண்.171/2014 நாள் 20.03.2015 தெரிவித்துள்ளார். எனவே மேற்படி தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1764/2015)

**தீர்மான எண் : 1205 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சிக்குட்பட்ட பாலத்தன்கரையில் அமைந்துள்ள மின்மாற்றியிலிருந்து (Transformer) சீரான மின் அழுத்தம் இல்லாத காரணத்தால், ஆழ்துளை கிணறு எண். 2,11 மற்றும் 21 ஆகியவற்றின் மோட்டார்கள் இயங்காத நிலை ஏற்பட்டு, பொதுமக்களுக்கு சீராக குடிநீர் வழங்க இயலவில்லை. மேலும் பாலத்தன்கரை, ஏசுதாஸ் காலனி, கள்ளியடைப்பு, சீம்பிளிவிளை, பொட்டல் மற்றும் கொட்டில்பாடு பகுதிகளில் குடிநீர் வினியோக குழாய்களில் ஏற்பட்ட உடைவுகளால், தண்ணீர் தேங்கி நோய்கள் பரவும் நிலை ஏற்பட்டது. எனவே பொதுமக்களுக்கு சீரான குடிநீர் வழங்கவும், சுகாதார சீர்கேட்டை தவிர்க்கவும் ரூ.65,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டு அதற்கான செலவுத் தொகை ரூ.63,773/– ஐ இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/130–1/2015)

**தீர்மான எண் : 1206 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் மீன் விற்கும் இடத்தின் அருகில் உள்ள தெருக்களுக்கு குடிநீர் வினியோகம் செய்வதற்காக Sluice valve திறக்கப்படும் போது குடிநீருடன் கழிவுநீர் கலப்பது கண்டறியப்பட்டதால், துறைமுகத்தெருவில் இரண்டு இடங்களில் Valve pit அமைப்பதற்கும், மேலும் நெசவாளர் தெரு, காமராஜர் தெரு வடிகால் ஓடையின் மேல் போடப்பட்ட மூடு சிலாப் உடைந்து போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால், பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் ரூ.55,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் பணியினை மேற்கொண்டு, அதற்கான செலவுத் தொகை ரூ.54,906/– ஐ இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் வழங்கியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/130–3/2015)

**தீர்மான எண் : 1207 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 10**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரையில் இயங்கி வரும் அங்கன்வாடி கட்டிடத்திற்கு புதிய மின்இணைப்பு பெற தொகை ரூ.1,600/– செலுத்த உதவி மின்பொறியாளர் அவர்களின் கடிதம் ந.க.எண்.உ.பொ/விநி.I/குள/கோ.கட்டு/அ.எண்.294/15 நாள் 21.05.2015–ன் படி தெரிவித்துள்ளார். எனவே மேற்படி தொகை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.இ2/2379/2014)

**தீர்மான எண் : 1208 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சியின் கணனிகள், சர்வர் மற்றும் பிரிண்டர்களின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) 31.05.2015–வுடன் முடிவடைகிறது. AMC ஏற்படுத்திக் கொண்ட HCL நிறுவனத்தார் கடந்த வருடம் நல்லமுறையில் பராமரித்து தந்துள்ளார்கள். தற்போது 01.06.2015 முதல் 31.05.2016 வரையிலான AMC புதுப்பிக்க கடிதம் வந்துள்ளது. பணியின் அவசியம் கருதி AMC புதுப்பித்துக் கொள்ள ரூ.65,048/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/544/2006)

**தீர்மான எண் : 1209 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சியின் பணிபுரிந்து வரும் சமுதாய அமைப்பாளர், இத்துறை மற்றும் பல்வேறு துறைகளின் மூலம் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்பு திட்டங்களை மக்களிடையே சென்று அடைவதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் இத்திட்டத்தின் செயல்பாட்டினை குறித்த பணி முன்னேற்ற அறிக்கை கள விவரங்களை சேகரித்தல், திட்ட பயன்களை மக்களுக்கு சென்றடைய பல்வேறு வங்கி அதிகாரிகளை ஒருங்கிணைத்து திட்ட செயல்பாட்டினை தெரிவு செய்ய வங்கி கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், சுய உதவி குழுக்களை உருவாக்கி அவர்களிடையே மேம்பாட்டிற்கு திட்டத்தின் மூலம் பயன்பெற்று தருதல், தகுதி வாய்ந்த பணியாளர்களை கண்டறிதல், சமுதாய அமைப்புக்களை ஏற்படுத்துதல் போன்ற பணிகளை செய்து வருகின்றனர்.

மேற்படி பணிபுரிந்து வரும் சமுதாய அமைப்பாளர்களின் பணியினை முறைபடுத்துவதற்காக தனியே ஒரு பணிவிதியினை உருவாக்குவதற்காக இந்நகராட்சி மன்றத்தின் அனுமதியை அரசு கடிதம் எண்.21661/எம்.இ./2011–14 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 22.04.2015 மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.1452/2007/யுபிஏ3, நாள் 11.05.2005–ன்படி ஒப்புதல் அளிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.சி1/1051/2015)

**தீர்மான எண் : 1210 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சியின் சேவை மையத்தின் Air condition machine –ல் Gas தீர்ந்து விட்டபடியால், கணனிகளின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு அவசரம் கருதி Gas நிரப்பி Service செய்த வகையில் செலவு செய்யப்பட்ட தொகை ரூ.875/– வழங்கியதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/544/2006)

**தீர்மான எண் : 1211 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு காம்பெக்டர் லாறி எண்.TN-75-L-2565–ன் தகுதி சான்று புதுப்பிக்க வேண்டி அதற்கான பழுதுகளை ரூ.86,000/– மதிப்பீட்டில் சரி செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1169 நாள் 31.03.2015–ன்படி, அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், கூடசேரி | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | M/s.கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோ மொபைல்ஸ், ஆசாரிப்பள்ளம்ரோடு நாகர்கோவில். | மதிப்பீட்டைவிட 0.53% அதிகம். |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு**: மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். எச்1/1841/2013)

**தீர்மான எண் : 1212 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

குளச்சல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் மினி லாறி எண்.TN-75-T-5508–ன் தகுதி சான்று புதுப்பிக்க வேண்டி அதற்கான பழுதுகளை ரூ.36,000/– மதிப்பீட்டில் சரி செய்வதற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1168 நாள் 31.03.2015–ன்படி, அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1. | M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், கூடசேரி | மதிப்பீட்டு விகிதம். |
| 2. | M/s.கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோ மொபைல்ஸ், ஆசாரிப்பள்ளம்ரோடு நாகர்கோவில். | மதிப்பீட்டைவிட 2.29% அதிகம். |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனம் மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. எனவே இது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு**: மதிப்பீட்டு விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். எச்1/2913/2013)

**தீர்மான எண் : 1213 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2015 மே திங்கள் 29–ம் நாள் (29.05.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தான்கரை பகுதியில் அமைந்துள்ள அங்கன்வாடி (மையம் எண்.79) கட்டிடத்தின் மேற்கூரையிலிருந்து நீர் கசிந்து சுவர் வழியாக தரை பகுதிக்கு வருவதால், குழந்தைகள் நலனை கருத்தில் கொண்டு மேற்கூரை பகுதியில் தரை ஒடு பதிப்பதற்கும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1132/2015)

**தீர்மான எண் : 1214 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4, மலிக்கா கிணறு–ஆசாத்நகர் சாலையில் அமைந்துள்ள வடிகால் ஓடையில் மழைநீர் தேங்கி நிற்பதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது. எனவே மேற்படி வடிகால் ஓடையில் தண்ணீர் சீராக செல்வதற்கு ஏதுவாக, தரைப் பகுதியை சரி செய்வதற்கும், வடிகால் ஓடையின் பக்க சுவர்களை உயர்த்தி, உடைந்த பகுதிகளை சரி செய்வதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,80,000/– க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/3130/2014)

**தீர்மான எண் : 1215 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.20–ல், எம்.ஜி.ஆர். தெருவில் தற்போது அமைந்துள்ள வடிகால் ஓடையில் பக்க சுவர் இல்லாத காரணத்தால் கழிவுநீர் சாலையோரத்தில் செல்லும் நிலை உள்ளது. மேலும் மழை காலங்களில் சாலையின் மேல் கழிவுநீர் தேங்குவதால், சாலை சேதமடைந்துள்ளதோடு, அருகில் உள்ள குடியிருப்புகளுக்குள் மழைநீர் சென்று விடுகிறது. எனவே பொது நலன் கருதி, மேற்படி பகுதியில் புதிதாக மழைநீர் வடிகால் ஓடை மற்றும் மூடு சிலாப் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,80,000/– க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின்கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1019/2015)

**தீர்மான எண் : 1216 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணி பெண்களுக்கு தடுப்பூசி போடுவதற்கு தனியாக அறை இல்லாத காரணத்தால், நகராட்சி வளாகத்தில் சேவை மையம் அருகில் புதிதாக தடுப்பு சுவர் (Alu-Anodised Partition) அமைத்து தனியறை அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.55,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/876/2015)

**தீர்மான எண் : 1217 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட க.எண்.2/257–2 எண் கொண்ட ஷெட்–க்கு வணிக பயன்பாட்டின் கீழ் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தற்போது அதே இடத்தில் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு மேற்படி கட்டிடத்திற்கு வரிவிதிப்பு செய்யப்பட்டு 2/257–3 என்ற கதவு எண் இடப்பட்டுள்ளது. எனவே மேற்படி கதவு எண்ணை திருத்தம் செய்து ஷெட்டுக்கான வணிக பயன்பாட்டில் உள்ள குடிநீர் இணைப்பை குடியிருப்பு பயன்பாட்டிற்கு மாற்றம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ2/993/2015)

**தீர்மான எண் : 1218 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 21 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின் மோட்டார்கள் மூலம் 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு குடிநீரேற்றப்பட்டு, நாள் ஒன்றிற்கு சுமார் 25.60 இலட்சம் லிட்டர் குடிநீர் தினந்தோறும் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. அனைத்து பகுதி மக்களுக்கும் சீரான முறையில் குடிநீர் வினியோகம் செய்வதற்கு ஏதுவாக, மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றுவதற்கான மோட்டார்கள், பேனல் போர்டுகள், பிரதான குழாய்கள், மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து வெளியேறும் வினியோக குழாய்கள் மற்றும் வால்வுகளில் ஏற்படும் பழுதுகள் மற்றும் உடைவுகளை உடனுக்குடன் சரி செய்வதற்கு ஏதுவாக நகராட்சி பகுதிகள் இரண்டு மண்டலங்களாக பிரிக்கப்பட்டு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படியே 2015–16–ம் ஆண்டிற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு, ஒரு மண்டலத்திற்கு ரூ.3,50,000/– வீதம் இரண்டு மண்டலத்திற்கும் ஆகும் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.7,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொது நிதியின்கீழ் இரண்டு ஒப்பந்தத்தாரர்கள் மூலம் தனித்தனியே மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | மண்டலம் I | கொள்ளளவு | மண்டலம் II | கொள்ளளவு |
|---|---|---|---|---|
| 1 | பொட்டல் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 2.00 லட்சம் லிட்டர் | அலுவலக வளாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 7.00 லட்சம் லிட்டர் |
| 2 | பர்னட்டிவிளை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 0.60 லட்சம் லிட்டர் | தினசரி சந்தை வளாக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 3.00 லட்சம் லிட்டர் |
| 3 | துறைமுகத்தெரு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 3.00 லட்சம் லிட்டர் | மாதாகாலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 3.00 லட்சம் லிட்டர் |
| 4 | கொட்டில்பாடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 0.30 லட்சம் லிட்டர் | | |
| 5 | சிங்காரவேலன் காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 0.30 லட்சம் லிட்டர் | | |
| 6 | கே.எஸ்.எஸ்.காலனி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 3.00 லட்சம் லிட்டர் | | |
| | **மொத்தம்** | **9.20** | **மொத்தம்** | **13.00** |

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1779/2015)

**தீர்மான எண் : 1219 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

நகர் ஊரமைப்பு மேம்பாட்டுத் திட்டம் 2014–15–ன் கீழ், இந்நகராட்சிக்கு கொட்டில்பாடு பகுதியில், ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பூங்காவின் தொடர் கண்காணிப்பு மற்றும் பராமரிப்பிற்காக செவ்வந்தி பூ சுயஉதவி குழுவினர் வசம் மேற்படி பூங்காவை ஒப்படைப்பு செய்வதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/4585/2009)

**தீர்மான எண் : 1220 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகளை அள்ளுவதற்கு தேவையான பெரிய கூடைகள் போதிய அளவில் இல்லாத காரணத்தால், புதிதாக 30 எண்ணம் பெரிய கூடைகள் வாங்குவற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.10,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1368/2014)

**தீர்மான எண் : 1221 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் உரக்கிடங்கில் குப்பைகளை முறையாக பிரித்து உரத்தினை உடனுக்குடன் அப்புறப்படுத்தவும், துர்நாற்றம் வீசாமல் தேங்கியுள்ள குப்பைகளை உடனே அப்புறப்படுத்தவும், மாவட்ட ஆட்சித்தலைவர், நாகர்கோவில் அவர்களின் செயல்முறை ந.க.எண்.அ1/110610/2013 நாள் 25.04.2013–ல் தெரிவிக்கப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் இரண்டு மாதத்திற்கு 10 பணியாளர்களை பணியமர்த்த, இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1167 நாள் 31.03.2015–ல் ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இரு மாதங்களுக்கு 10 பணியாளர்களை பொது சுகாதார நலன் கருதி பணியமர்த்திட உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1368/2014)

**தீர்மான எண் : 1222 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் தள்ளுவண்டிகளின் டயர்கள் மற்றும் அலைன்மெண்ட் ஆகியவை சரியாக இல்லாத காரணத்தால், குப்பைகள் சேகரிப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே 10 எண்ணம் தள்ளுவண்டிகளின் டயர்களை மாற்றி புதிதாக டயர்கள் பொருத்திடவும், வர்ணம் பூசுதல் மற்றும் இதர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு**: மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1018/2015)

**தீர்மான எண் : 1223 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சியில் அலுவலக உபயோகத்திற்கு தேவையான பர்னிச்சர்களை கொள்முதல் செய்வதற்காக, தமிழ்நாடு அரசு சிறுதொழில் நிறுவனமான TANSI Furniture and Engg.Works, Pettai at Pathamadai நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட விலைப்பட்டியல் எண். 006 நாள் 25.05.2015–ல் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.1,19,148/– விலையில், நேரடியாக பர்னிச்சர்களை கொள்முதல் செய்வதற்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1871/2010)

**தீர்மான எண் : 1224 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 12**

இந்நகராட்சிக்கு சொந்தமான கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள பி.எஸ்.என்.எல். மற்றும் முத்தூட் பைனான்ஸ் அலுவலகங்களில் தரை மற்றும் வெளிப்புற (Verandah) பகுதிகளில் போடப்பட்டுள்ள தரை ஓடுகள் உடைந்து குண்டும், குழியுமாக காணப்படுவதால், மேற்படி இடங்களில் புதிதாக தரை ஓடுகள் பதிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1180/2015)

**தீர்மான எண் : 1225 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி